பொது சன நூலகம்
10 MAY 2002
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்;

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 27 வெள்ளிக்கிழமை (10.05.2002) தொலைபேசி 3378 ஒலி 142

## சமாதான முயற்சி தோல்வியுற்று

# புலிகளுடன் யுத்தம் செய்வதாயின்

# உலக வல்லரசின் உதவி பெறப்படும்

## சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(பாராளுமன்றத்திலிருந்து நமது நிருபர்)

**அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்று வரும் சமாதான முயற்சிகள் தோல்வியுற்று விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அரசாங்கம் உலக வல்லரசு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும். இவ்வாறு சமுர்த்தி இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்இடையே ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன் படிக்கை தொடர்பாக நேற்று விசேட பாராளுமன்ற விவாதம் ஒன்று நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சமுர்த்தி இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா அங்கு தொடர்ந்து பேசுகையில்:

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஆரம்பகட்ட நடவடிக்கையாக வடக்குக்கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையை முதலில் தெரிவித்தவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது தலைமையிலான பொ.ஐ.முன்னணி அரசுமே ஆகும்.

இந்நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் தனது கட்சிசார்பாக ஆட்சேபனை தெரிவிப்பது ஏன் என்று விளங்கவில்லை. அது ஒரு வேடிக்கையாக

(8ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் பணிப்பாளர் நிகால் வெளிநாடு செல்லத்தடை

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிகால் கருணாரட்ண நாட்டை விட்டு வெளியேறுவதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தம்மைக் கைது செய்யமுனைந்து வருவதாகவும் இதனை தடுக்கக் கோரி நிகால் கருணாரட்ண தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த நீதிமன்றம நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை ஒவ்வொரு மாதத்தினதும்இறுதி ஞாயிற்றுக் கிழமைக்ளில் இரகசியப் பொலிஸார் முன்னிலையில் ஆஜராக வேண்டும என வும் பணிக்கப்பட்டுள்ளது. (த)

## அரசுக்கு எதிராக எதிர்ப்புக் கூட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு தொடர்ந்து சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருத்தல் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 16ம் திகதி நுகேகொடவில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக எதிர்க் கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த)

## இலவசக் கண்சிகிச்சை முகாம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

### அமைச்சர் டாக்டர் ஜயலத் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான இலவசக்கண்சிகிச்சை மருத்துவ முகாம் ஒன்றை இம் மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

...மினை அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா தனியார் துறையினரின் உதவியுடன் நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களின் கண் தொடர்பான பிரசசினைகளுக்கு இச்சிகிச்சை முகாம் மூலம் பரிகாரம் தேடப்படவுள்ளது.

## கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு



(கிளிநொச்சி)

நோர்வேயின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக ...

பியூறு ஹெவ்டே, மற்றும் உபதலைவர் ஆகியோரும், விடுதலைப்புலிகள் ...



ஏற்பாடுகளைச் செய்து வருவதாக புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்த இலவசக் கண்சிகிச்சை முகா

சினைகளுக்கு இச்சிகிச்சை முகாம் மூலம் பரிகாரம் தேடப்படவுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)



(கிளிநொச்சி)

நோர்வேயின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் பியுறு ஹெவ்டே, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினரை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்று நண்பகலும் இரவும் இரண்டு கட்டமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது நோர்வேயின் சார்பில யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் பியுறு ஹெவ்டே, மற்றும் உபதலைவர் ஆகியோரும், விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், மற்றும் விடுதலைப்புலிபிரமுகர்கள் தங்கன், புலித்தேவன் தொலகாப்பியன் ஆகியோர்ரும் கலந்து கொண்டனர்.இப் பேச்சுக்களின் போது என்ன விடயங்கள ஆராயப்பட்டனவென்று தெரியவரவில்லையாயினும் ஏ-9 கண்டி வீதியை உணவுப் பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனத்

(8ம் பக்கம் பார்க்க)



# இலங்கை அரசு மீண்டும் ஒருமுறை முட்டாளாகி விடக் கூடாது!

## அரசை எச்சரிக்கிறார் ஜனாதிபதி

(நியூயோர்க்)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, முக்கியபிரச்சினைகளில் கவனம் செலுத்துமாறு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் சி.என்.என். தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தாய்லாந்தில் இலங்கை அரசுடன் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையில் தேவையற்ற சிறிய பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதை விட தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளில் விடுதலைப் புலிகள் கவனம் செலுத்த வேண்டும். தாய்லாந்துப் பேச்சுவார்த்தை இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இலக்கை நோக்கி நடத்தப்படவேண்டும். அதன் மூலம் இலங்கைக்குள் தமிழர்களும் முஸ்லிம்களும் சம வாய்ப்புடனும், சமஉரிமையுடனும் வாழவழி காண்பது அவசியமாகும்.

இலங்கை அரசுக்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகளுக்கு தனது முழு ஆதரவு உண்டு என்று கூறிய ஜனாதிபதி இம்முயற்சி திருப்திகரமாக முடிய வேண்டும் என்றும், இலங்கை அரசை மீண்டும் ஒரு முறை முட்டாளாக்கி

(8ம் பக்கம் பார்க்க)

பெண் பொலிஸ் மீது வல்லுறவு புரிந்த

# பல்கலைக்கழக மாணவனுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை

(நீர்கொழும்பு)

பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை பாலியல இம்சைக்கு உபடுத்திய பல்கலைக்கழக மாணவன் ஒருவனுக்கு நீதிமன்றம் ஒருவருட கடுழியச் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

பிரஸ்தாப மாணவன் நீர்கொழும் பிலிருந்து கொழும்புக்கு தனியார் பேருந்தில் பயணம் செய்தபோது மேற்படி பெண் கான்ஸ்டபிளை பாலியல் இம்சைக்கு உட்படுத்தியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்ட பிரஸ்தாப மாணவனுக்கு நீர் கொழும்பு நீதிவான் ஒருவருட

(8ம் பக்கம் பார்க்க)

# இந்திய சபாநாயகராக மனோகர் யோசி தெரிவு



மனோகர் யோசி

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்றின் மக்களவை சபாநாயகராக மததிய அமைச்சரும் சிவசேனைக் கட்சியின் மூத்த தலைவருமான போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரை சபாநாயகராக பிரதமர் வாஜ்பாய் முன்மொழிய உள்த்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி வழிமொழிந்தார்.

சபாநாயகரை தெரிவு செய்வதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதித்தினமான நேற்று நண்பகல் வரை மனோகர் யோசியைத் தவிர வேறு

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கற்பகப்பிள்ளையார்கோவிலடி கோப்பாய், தெற்கு கோப்பாய் முகவரியில் வசிக்கும் சிவசிதம்பரம் ஷண்முகதாசன் என்பவரது விசேட அடையாள அட்டை (இல:- 0903008171) 30.4.2002 இல் இருபாலைச் சந்திக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில்காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படிமுகவரியில் அல்லது வலம்புரிக்காரியாலயத்தில்ஒப்படைக்கவும். (5087)

## 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ்

# 4 கோடி 70 இலட்சம் ரூபா பெறுமதியான புனர்வாழ்வு வேலைத் திட்டங்கள் நிறைவேற்றம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் நூறுநாள் துரித வேலைத்திட்டத்தின் கீழ், புனர்வாழ்வு அதிகார சபை 4 கோடி 70 இலட்சம் ரூபா பெறுமதியான புனர்வாழ்வு வேலைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் எம்.சுபைதீன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் மீன்குடியேற்றக் கிராமங்களை அமைப்பதற்காக 19.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மாவட்டங்கள் தோறும் தலா 100 வீடுகள் வீதம் 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

பயங்கரவாத வன்செயல்களினால் உடல் ஊனமுற்றோர்க்கான கொடுப்பனவாக 250 குடும்பங்களுக்கு 110 இலட்சரூபாவழங்கப்பட்டுள்ளது.

பயங்கர வாத நடவடிக்கைகளின் போது சொத்துக்களை இழந்த 115 அரசாங்க மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 28 வணக்கஸ் தலங்களை புனரமைப்பதற்காக23 இலட்சம் ரூபா கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவைதவிர, அகதி முகாம்களில் வசிக்கும் 115 புதுமணத்தம்பதிகள் புதியதொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்காக 27 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (உ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் கமல்இயக்கிய **MADHU RAMPARAKATHTHU**(மதுராம் பரக்கத்து)எனும் மலையாளத் திரைப்படம் நாளை சனிக்கிழமை மு.ப10.00 மணிக்குபுவியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும்கலந்துகொண்டு பயன்பெறலாம்என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

# ஆட்கள் கடத்தப்படுவதை தடுக்க சர்வதேச பொலிஸின் உதவி

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஆடகள் கடத்தப்படுவதை கட்டுப்படுத்த சர்வதேச பொலிஸ்நிறுவனத்தின் ஒத்துழைப்பை அரசு பெற்றுக் கொள்ளவிருக்கிறது.

வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்துவதில் பெரும் வர்த்தகர்களும், பாதாள உலக கோஷ்டியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும்,

இதனால் இவர்கள் பெருந்தொகைப் பணத்தை மக்களிடமிருந்து பெறுவதாகவும் பின்னர் மக்களை ஏமாற்றி வருவதாகவும் சி. ஐ. டி. பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சர்வதேச மோசடியை கட்டுப்படுத்த ஏற்கனவே இன்ரபோல் நிறுவனத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாகவும் சி. ஐ. டி யினர் தெரிவித்துள்ளனர். (உ-9)

### பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு

## உணவு சுகாதாரம் பற்றிய ஐந்துநாள் பயிற்சி நெறி

(சுதுமலை)

யாழ் மாவட்டத்தில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிற்கு உணவுச்சுகாதாரம் தொடர்பான மேலதிக ஐந்துநாள் பயிற்சி எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் தற்போது உணவு சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட புதிய சட்டங்கள் தொடர்பாகவும், அதைச் செயற்படுத்தும் விதம் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படஉள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இருந்து 30 க்கும் மேற்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்ளவுள்ளனர்(உ 252)

## இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையேயான விளையாட்டு விழாவின் இறுதி மெய்வல்லுனர் போட்டிகள எதிர் வரும 18,19 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசஅதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளனார். (உ-10)

### முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் 100 முன்பள்ளிகளுக்கு வழங்குவதற் கெனகற்றல் விளையாட்டு உபகரணங்களயுனிசெவ்நிறுவனத்தினால் உள்ளூராட்சி ஆணையாளரிடம் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற உபகரணங்கள் சென்ற வருடமும மாவட்ட செயலகத்தின ஊடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

### குடாநாட்டுக்கு சூரியமின்கலம்

## இங்கு வந்த குழுவில் இடம்பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்-கிழக்குப் பகுதிகளுக்கு உலக வங்கியின் உதவியுடன் வீடுகளுக்கு சூரிய மின்கலங்களைப் பொருத்துவது தொடர்பாக ஆராய குடாநாட்டுக்கு குழுவொன்று வந்துள்ளது.

சோலார இன்டஸ்ரீஸ் சறுப்கத்தைச்சேர்ந்த சனத் வீரக்கொடி, ஷெல சோலார்லங்கா லிமிட்டெட்டைச் சேர்ந்ன்வர்களான பிரதீப் ஜயவர்த்தனா, எஸ்.காருணியநாதன் அக்ஸஸ் சோலார் லிமிட்டெட்டைச் சேர்ந்தவர்களான தியோபர்னாந்து, சுசந்தா மும்முல்லகே, செல்கோசோலார் நிறுவனத்தைச்சேர்ந்த சுசந்த பின்டோ, அல்பா தேர்மல் நிறுவனத்தைச் சேர்ந்த லஷ்மன் ஜயசூரியா, சீட்ஸ் கரண்டி லிமிட்டெட்டைச் சேர்ந்த திருமதி இந்திராணி ஹெட்டியாராச்சி ஆகியோரே இங்குவந்துள்ளனர்(உ19.6,2

## வவுனியாவில் நேற்று ஒருநாள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் கடந்த 7 மாதகாலமாகதடுத்துவைக்கப்பட்டுள்ள வவுனியா ப.நோ, கூட்டுறவுச் சங்க ஊழியரான ரி.கனகரத்தினத்தை விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றுகோரி வவுனியா ப.நோ கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்று ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

வவுனியா கடைவீதியிலுள்ள சங்கத் தலைமையகத்திற்கு முன்னால் இவ்உண்ணாவிரதம்நடை பெற்றதால் சகல கூட்டுறவுப் பணிகளும் ஸ்தம்பிதமடைந்தன.

இப் போராட்டததில் வவுனியாவில் உள்ள 24 ப.நோ. கூ. சங்கங்களின் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

தடுத்து வைக்கப் பட்டவர் நீரிழிவு, இருதய நோய் என்பவற்றால் பீடிக்கப்பட்டுள்ளமையால் அவரை உடனடியாக விடுவிக்கவேண் மென்று ஊழியர் சங்கம் கோரியுள்ளது (உ-9)

## பொதுக் கூட்டம்

(சுதுமலை)

கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் விவசாய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும்12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 3மணிக்கு சீ.சீ.ரீ.எம் பாடசாலையில் தலைவர் த. கனகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு நல்லூர் கமநலகேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வருகைதரவுள்ளதுடன். நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற இருப்பதால் சகலஅங்கத்தவர்களையும் தவறாது மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி சம்மேளனத்தின் செயலாளர் அ.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இவ்வருடத்தில் இப்பகுதியில் விவசாய விரி வாக்கல் நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது (உ.252)

## இராசி பலன்

10-05-2002
சித்திரை 27 வெள்ளி
திரயோதசி பி.ப 2.15 வரை
ரேவதி மு.ப 11 வரை
இராகுகாலம் 10.24-11.54
நல்ல நேரம் 5.54-7.24
அமிர்தம்

**மேடம்**

ஜனவசியம், காரியம்கைகூடும், புதிய முயற்சி, தெய்வ தரிசனம்.

**இடபம்**

தேவையற்ற மனஸ்தாபம், சுப செலவு, காரிய அலைச்சல், தந்தைவழி உறவு.

**மிதுனம்**

எடுத்த காரியம் கைகூடும் தெய்வ சிந்தை, பொருள சேர்க்கை, பெரியோர் மதிப்பு.

**கடகம்**

நல்நிகழ்வு, அதிக பிரயாசை, பிறர் உதவி, தொழில் நன்மை.

**சிங்கம்**

தொழில் நிலை மாற்றம், அபகீர்த்தி, பிரயாணம், முயற்சி தாமதம்.

**கன்னி**

எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உடல்நல குறைவு, விருந்துபசாரம்.

**துலாம்**

நண்பர்கள் உதவி, திடீர் பயணம், முயற்சி பலிதம் குடும்ப நன்மை.

**விருச்சிகம்**

எதிர்பாராத நன்மை, நோய்குணமடைதல், காரிய அனுகூலம், சுவாரசியம்.

**தனுசு**

தொழில் நன்மை, மனத் தாங்கல், குடும்பத் தகராறு முயற்சி தாமதம்.

**மகரம்**

ரோகநிலை, காரிய தாமதம், தனவிரயம், மனக் கிலேசம்.

**கும்பம்**

இனிய சம்பவம், காரிய நன்மை, அந்நியர் உதவி, தனவரவு.

**மீனம்**

மாதர் உதவி, பணவிரயம், முயற்சிதாமதம். கௌரவக்குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**


## பனை அபிவிருத்திச் சபை

விசேட அறிவித்தல்

### தங்குமிட வசதி

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தரும் பிரயாணிகள் தங்குவதற்கு ஏற்ற பல வசதிகளை கொண்ட விடுதி யாழ் நகர் மத்தியில் பனை அபிவிருத்திச் சபையால் வாடகைக்கு வழங்கப்படுகின்றது.

தேவைப்படுவோர் முன்கூட்டியே எமது கொழும்பு நகர காரியாலயத்துடன் அல்லது யாழ் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்யவும்.

தொடர்பு:

**கற்பகம்**
244, காலி வீதி,
கொழும்பு,
தொலை பேசி: 586820
589185

**தலைமையகம்**
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2034

(கி-4195)


## யாழ் இலங்கைவங்கிக்கிளை ஊழியர்கள் 39பேருக்கு கொழும்பில்கணனி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் விசேட கணனிப் பயிற்சிக்காக கொழும்பு சென்றுள்ளனர்.

ஜனாதிபதி மாவத்தையில் உள்ள இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்விசேட கணனிப் பயிற்சிக்காக யாழ். இலங்கை வங்கிக் கிளையில் இருந்து 13பேர் கொழும்பு சென்றுள்ளாதாகவும் எதிர்வரும் 17ஆம்திகதி வெள்ளிக்கிழமை மேலும் 13 பேர் செல்லவுள்ளதாகவும் அடுத்தமாத முற்பகுதியில் மேலும் 13 பேர் செல்லவுள்ளதாகவும் இலங்கை வங்கி மேற்தரக்கிளை முகாமையாளர் சி.விக்கினராஜா தெரிவித்தார்(உ-2)

## கத்திக்குத்து

அல்வாய் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வயோதிபர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் கிழக்கில் வசிக்கும், சி. பேரானந்தம் (வயது 60) என்பவரே இரவு தன்னுடைய தோட்டத்திற்கு சென்று வரும் வேளையில் பிடரிப்பகுதியில் கத்தியால் குத்தப்பட்டும், நெஞ்சு வயிற்றுப் பகுதிகளில் கொட்டனால் தாக்கப்பட்டும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

நல்லூர் கிளை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.

# புலிகள் ஒப்பந்தத்தை மீறுகின்றனர்

## எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

(கொழும்பு)

அரசுக்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மீறி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் விசேட விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயேஇவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

புலிகள் ஒப்பந்த விதிகளை மீறுவதால் நாட்டின் பொதுவான பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சாதகமான முறையிலேயே அமுல் செய்யப்படுகிறது.

வாகரையில் இடம்பெற்ற சம்பவமும் அதை கண்காணித்த விதமும் திருப்தி தரக்கூடியதல்ல. அதே சமயம் ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திகூறியுள்ளார். (ந-9)

# கடல் யுத்த நிறுத்த மீறல்களை கண்காணிக்க அதிவேக படகுகள்

### கண்காணிப்புக் குழுவினர் பயன்படுத்துகின்றனர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடற்பிரதேசத்தில் இடம் பெறுவதாக அறிவிக்கப்படும் யுத்த நிறுத்த மீறல்களை கண்காணிக்க, நோர்வே யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவினர் அதிவேக படகுகளை பயன்படுத்தி வருகின்றனர்.

வாகரைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற யுத்த மீறல் சம்பவத்தை தொடர்ந்தே இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக அரசிடம் ஆராய்ந்த பின்னர் அதிவேகப் படகுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த அதிவேகப் படகுகளைப் பயன்படுத்துவதன் மூலம் சம்பவம் இடம்பெறும் இடத்திற்கு விரைவாக செல்ல முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-9)

# துணுக்காய் கோட்டத்தில் 55 வீத ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் வலயத்தில் 55 வீத ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகதுணுக்காய் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

துணுக்காய் வலயத்தில் உள்ள 54 பாடசாலைகளில் 22 ஆயிரத்து 915 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

இவர்களுக்கு கணிதம் கற்பிக்க4 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், 4 ஆங்கிலஆசிரியர்களும் 8விஞ்ஞான ஆசிரியர்களும்உள்ளனர்.

இவ் அடிப்படையில் 6 ஆயிரம் மாணவர்களுக்கு தலா ஒரு ஆங்கில, கணித ஆசிரியரும், 3ஆயிரம் மாணவர்களுக்கு தலா ஒரு விஞ்ஞான ஆசிரியரும் உள்ளனர்.

ஆண்டு 7 இற்கு குறைந்த வகுப்பிலுள்ள மாணவர்கள் மர நிழலில் கட்டாந்தரையில் அமர்ந்தே கல்வி பயில்கின்றனர். கட்டிட, தளபாட பற்றாக் குறை நிறையவே உள்ளது. நிரந்தர கட்டிடங்கள் இல்லாதது பெருங்குறையாகும் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ-3)

## இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளைக்கு இன்ரநெற் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ். மேற்தரக்கிளையில் இன்ரநெற் இணைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டே இலங்கையில் உள்ள எந்தக் கிளைக்கும் வைப்பினை ஒரு நிமிடத்தில் மேற்கொள்ள கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

## 3 மாதங்களில் மற்றோர் தமிழ் இளைஞர் கொலை

### லண்டனில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மூன்று மாதங்கள் முன்பு ஒரு தமிழர் கொலை செய்யப்பட்டதற்குப் பின்னர் மேலும் ஒரு தமிழர் லண்டனில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

செ. சுரேஸ்குமார் (வயது-26) பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வெம்ப்ளியிலுள்ள லியோன் பார்க் அவனியூவில் உள்ள அவரது வீட்டில் இரவு 8.00 மணியளவில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்திற்கு முன்பு இருவர் அவரது வீட்டிற்கு சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். 19-40 வயதுடைய 14 பேரை வெம்ப்ளி பொலிஸார் திங்களன்று இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்துள்ளனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் 18 வயதுடைய சம்பந்தர் இராமச்சந்திரனும் வெம்ப்ளியிலேயே எ.ரிகாயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டிருந்தமை தெரிந்ததே. (உ)

## நாளை தேர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில்இரதோற்சவம் நாளை மு.ப 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை மறுதினம் தீர்த்தோற்சவம் இடம் பெறும். (து)

## நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை புனர்நிர்மாணம் செய்து பவள விழாவினை நடத்தும் நிதி வகையில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

## உதைபந்தாட்ட உலககிண்ணங்கள் நான்கை பிறேசில் சுவீகரிப்பு

(கொழும்பு)

உதைபந்தாட்டஉலகக்கிண்ணங்களைஇதுவரை 7நாடுகள் மத்திரமே சுவீகரித்துள்ளது.

உலகில் சுமார்130நாடுகள் உதைபந்தாட்டத்தில் இதுவரை பங்குபற்றியுள்ளபோதும் நடைபெற்ற 16போட்டிகளில் பிறேசில், இத்தாலி, மேற்குஜேர்மனி, ஆர்ஜென்டீனா, உருகுவே, இங்கிலாந்து பிரான்ஸ் ஆகியநாடுகள் மாத்திரமே வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துள்ளன.

பிறேசில்அணி4தடவைகளும் (1958, 1962, 1910, 1994) இத்தாலிஅணி 3தடவைகளும் (1934,1938,1982) மேற்கு ஜேர்மனி 3தடவைளும் (1954, 1974, 1990) உருகுவேஅணி 2தடவைகளும் (1930,1950)ஆர்ஜென்டீனா அணி 2தடவைகளும் (1978, 1986) இங்கிலாந்துஅணி 1தடவையும்(1966)பிரான்ஸ் அணி 1தடவையும் (1998) உலககிண்ணத்தை சுவீகரி)துள்ளன (உ-9

## 158 தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பலில் குடாநாட்டுக்கான 158 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டதாகவும்,

இங்கிருந்து வெளியூர்களுக்கான 39தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

# இராணுவ முகாமில் இருந்த ஆயுதங்களை காணோம்

(கொழும்பு)

பொலன்னறுவை பதவிய இராணுவ முகாமில் இருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்றும் மகஸின்களும் துப்பாக்கி ரவைகளும் காணாமல் போயுள்ளன.

இது தொடர்பாக அம்முகாமின் பொறுப்பதிகாரி பொலிஸில் புகார் செய்துள்ளார்.

லான்ஸ் கோப்ரல் ஒருவருக்குச் சொந்தமான ரி-56 ரகத் துப்பாக்கியும், மகஸின்களும், 30 துப்பாக்கி ரவைகளுமே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன. (உ)

## மத்திய மருந்தகத்திற்கு ஐந்து கட்டில்கள்

(சுதுமலை)

மானிப்பாய் மத்திய மருந்தகத்தின் பிரசவ விடுதிக்கு 5 கட்டில்களையும், ஒரு குளிர்சாதனப் பெட்டியையும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அண்மையில் வழங்கியுள்ளார்.

மேற்படி மருந்தகத்தில் இதுவரை காலமும் துருப்பிடித்த கட்டில்கள் பாவனையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

### புதுவருட தினத்தன்று மக்கள் வங்கி

## 1.3 பில்லியன் ரூபாவை வைப்பாக திரட்டியது

(தென்மராட்சி)

இவ்வருடம் புதுவருடதினத்தன்று மக்கள் வங்கியால் ரூபா 1.3 பில்லியன் தொகை வைப்பாகத் திரட்டப்பட்டதென்று மக்கள் வங்கியின் சந்தைப்படுத்தல் பிரசாரப் பகுதியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பிரதேசக் கிளைகளில் அன்றைய தினம் ரூபா 38.3 மில்லியன் தொகை திரட்டப்பட்டதாகவும் 15 ஆயிரம் ரூபாவுக்கும், அதற்கு மேற்பட்ட தொகையை வைப்பிலிட்டவர்களுக்கும் கைவிசேடமாக புதியநாணயம் 10 ரூபாவுடன் மகளிருக்கு ஒரு மகளிர் குடையும் ஆடவருக்கு ஒரு ஆடவர்குடையும்!மேலதிக அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்டது. (உ-77)

## இ. தொ. க. அமைப்பாளர் தொண்டர் ஆசிரியரை நேரில் சந்தித்து பேச்சு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் கொழும்பு மாநகரசபைத்தேர்தல்ஐ.தே.க.வேட்பாளருமானசி.சுசீந்திரன், நிரந்தர நியமனம் கோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொண்டர் ஆசிரியர்களை அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இடமான மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை முன்றலுக்குச் சென்று சந்தித்தார்.

அவர்களுடன் கலந்துரையாடி விபரங்களை அறிந்து கொண்ட சுசீந்திரன், நியமனம் வழங்குவதுதொடர்பாக தான் கல்வியமைச்சருடன் கலந்துபேசவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (உ)

## சமாதான விழிப்புணர்வுக் குழு இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

தென் பகுதியில் இருந்து சமாதானத்திற்கான விழிப்புணர்வுக் குழு இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

ஏழு பேர் அடங்கிய இக்குழுவிற்கு வண பிதா அன்ரனி சிசில் தலைமை தாங்குகிறார்.

வடக்கு-கிழக்கு மக்களின் சமாதான எதிர்பார்ப்பினை அறிந்து கொள்ளுதல், இனி வருகின்ற காலங்களில் தெற்கு மக்களும் வட கிழக்கு மக்களும் இணைந்து சமாதானத்துக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுதல் ஆகிவற்றை நோக்கமாககொண்டு இக் குழுவினர் வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

3 நாட்கள் யாழ். நகரில் தங்கியிருக்கும் இவர்கள் விதவைகள் மீனவர்கள், விவசாயிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் என்ன என்பதனையும் ஆராய இருக்கின்றனர்.

வலிகாமம், குருநகர் பகுதி, தீவுப்பகுதிகளுக்கும் சென்று அப்பகுதி மக்களின் நிலையை அறிய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

## கட்டடத் திணைக்களம் மீள் நிர்மாணம்

(வவுனியா)

இராணுவநடவடிக்கையால் பலத்த சேதத்திற்குள்ளான கிளிநொச்சிகட்டடத்திணைக்களத்தை மீள நிர்மாணிக்கும் வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, 1996 ஜூலை முதல் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து அக்கராயன் குளத்தில் இயங்கிவரும்வலயக் கல்விப் பணிமனையை கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலய காணியில் நிறுவும் நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (உ-9)

## மேசைப்பந்தாட்ட போட்டி

(சுண்டுக்குளி)

வடக்கு-கிழக்கு விளையாட்டுத்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள கழகங்களுக்கு இடையிலான. மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ். வை. எம். சி. ஏ. உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் இரு பாலாருக்கும் வெவ்வேறாக நடைபெறவுள்ள இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அணிகள் காலை 8.00 மணிக்கு முன்னதாக வை. எம். சி. ஏ. பணிமனையில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ. எவ். ஜே. றூபசிங்கம் கேட்டுள்ளார். உ-110)

# நாவலர் மேற்கொண்ட நற்பணிகளினால்

# கந்தபுராண கலாசாரம் நின்று நிலைக்கிறது

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் சைவமாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு 4.5 2002ல் நடைபெற்ற போது, கந்தபுராணமும், யாழ்ப்பாண கலாசாரமும் என்ற தலைப்பில் கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)ஆற்றிய உரையின் தொகுப்பு.

'யாழ்' தமிழரின் தொன்மையான இசைக்கருவி. யாழை மீட்டி இன்னிசை எழுப்பும் கலைஞர் யாழ்ப்பாணர். இன்று யாழ். பெயரளவில் மட்டும் நிலவ, அதன் இடத்தினை வீணை எடுத்துக் கொண்டது. யாழ்ப்பாண வரலாற்றிலே அதன்தொடக்கக் குடியேற்றம் யாழ்ப்பாடி ஒருவனாலேயே தோற்றுவிக்கப்பட்டது எனத் தெரிய வருகின்றது. ஈழத்து மன்னன் ஒருவன், அந்தயாழ்ப்பாடியின் யாழிசையை நயந்தளித்த நற்பரிசே மணற்றிடரான யாழ்ப்பாணம் என்பர்.

சைவமும் தமிழும்

யாழ்ப்பாணத்தின் தொன்மைக குடிகள் தமிழராகவும், சைவசமயிகளாகவும் விளங்கியமைகுறிப்பிடத்தக்கதாகும் மிகப்பழங்குடிகளாய்இந்நாட்டில்வாழ்ந்தோரின் வரலாற்றின்ஆதாரபூர்வமானதொடக்கம் கி.பி.13ஆம்நூற்றாண்டிலிருந்தாகும், ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தோடு தமிழ்மன்னரின் ஆட்சியானது, பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இங்கு நிலவியது. சிவாலயங்கள், விநாயகராலயங்கள், அம்பாள் ஆலயங்கள், முருகனாலயங்கள்என்பனஅமைத்தும், தமிழ்ச்சங்கம் நிறுவியும் நூலகம் அமைத்தும், புலவர்களை ஆதரித்தும் அவர்களைக் கொண்டுவைத்திய சோதிட நூல்களையும் சைவ சமயப்பிரபந்தங்களையும் ஆக்குவித்தும் ஆரியச் சக்கரவர்த்திகள் சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்தனர்.

ஆனால், அந்நியரான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலர் ஆகியோரின் ஆதிக்கக் கரங்கள் இலங்கை மீது படர்ந்தபொழுதுயாழ்ப்பாணம் அவற்றிற்குத் தப்பிவிடவில்லை. புதிய மதம், புதியமொழி, புதியகலாசாரம் என்பன எங்கள் தாயகமண்ணிலே தலை எடுத்தபோது அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டிய இன்றியமையாமை திருநெல்வேலி ஞானப்பிரகாசர். முத்துக்குமார கவிராசர் முதலிய சிலரால் உணரப்பட்ட போதிலும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றி, மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது ஆராமையோடு மேற்கொண்ட முயற்சிகளின் பின்பே, எமக்கென்றொரு சமயமும், எமக்கென்றொரு மொழியும் எமக்கென்றொரு கலாசாரமும் உண்டுஎன்பதும் அவை பேணிப்பாதுகாக்கப்படல்வேண்டியவை என்பதும் எம்மவராற் பெரிதும் உணரப்பட்டன. நாவலர் பெருமான் தொடங்கி வழிகாட்டி நடத்திய சைவ, தமிழ், கலாசாரப் பாதுகாப்பியக்கத்தின் அடிநாதமே 'கந்தபுராண கலாசாரம்' ஆகும். இச்சொற்றொடரைக் கையாண்டவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆவர். நாவலரின் மாணாக்க பரம்பரையினரான இவரின் சிந்தையில் உதித்த இச்சொற்றொடர் மிகுந்த கருத்தாழம கொண்டது.

கலாசாரம் என்பதன் பொருள்

**Culture** என்ற ஆங்கிலபதத்திற்கு நேர்ப்பொருளாகக் கையாளப்பட்ட வடமொழிப் பதமே கலாசாரம் என்பது. இதனைப் 'பண்பாடு' என்ற தமிழ்ச் சொல்கொண்டுஇன்று கையாண்டு வருகின்றோம். ஆதிக்குடிகளின் வாழ்க்கை நெறிகளையும் அவற்றிற்கு உறுதுணையாய் அவர்கள் கைக்கொண்ட உணவு, உடை, கருவிகள், செய்முறைகள் என்பனவுமே ஒருகாலத்தில் **Culture** என்னும் பதத்திற்கு மானிடவியலார் (**Anthropologist**) வழங்கிய பொருளாகும். இப்பொருளின் போதாமையை உணர்ந்து மத்யு ஆர்னால்ட் (**Matlew Arnold**) முதலாம் இலக்கியவாதிகளே மக்களின் உன்னத விழுமியங்களின் **Values** உள்ளடக்கமாக அதனைவிரிவாக்கம் செய்தனர் என்றுபேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தமது 'தமிழர் பண்பாடு' என்ற நூலிலே விளக்கம் தந்துள்ளார்.

பண்டிதமணி கையாண்ட 'கந்தபுராணகலாசாரம்என்ற தொடரிலே, கலாசாரம் என்பது சைவத்தமிழ் மக்களது சமய நடைமுறைகளையும் அந்நடை முறைகளோடிணைந்த அழகுணர்வையும் வலியுறுத்துகின்றது என்று கொள்ளலாம். இவற்றிற்கு அடித்தளமாகவும், உயிர் நாடியாகவும் விளங்குவது கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணமே என்பது பண்டிதமணி கொண்ட முடிபாகும். இம்முடிபின் வெளிப்பாடே கந்தபுராண கலாசாரம்.

கந்தபுராணமும் ஆறுமுக நாவலரும்

''இந்தியாவிலே வித்துவான்கள், சைவகுருமார் முதலியோருள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தோர் சிலர் இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்'' என்பது ''யாழ்ப்பாணச்சமய நிலை'' என்ற துண்டுப்பிரசுரத்தில் (நாவலர் பிரபந்தத் திரட்டு பக். 72) மைந்துள்ள நாவலர் கூற்று.

''பெண்களின் உதிரத்தில் கந்தபுராணம் இரண்டறக் கலந்திருந்தது. அவ்வாறாய உதிரத்தில் உதித்தவரே நாவலர் பெருமான். மேன்மைகொள் சைவநீதி, எனற கந்தபுராணத் தொடர், நாவலர் பெருமானின் குறிக்கோள் மந்திரம்''

என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியிட்ட கந்தபுராண வசன நூலுக்குப் பண்டிதமணி எழுதிய அணிந்துரையில் வரும் ஒரு கூற்று. கந்தபுராணத்திலே தோய்ந்து தோய்ந்து தஅதன்மயமே ஆகிவிட்ட நாவலர் பெருந்தகை, அதன்சிறப்புப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

''எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அதியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்திலுள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல். சிந்தித்தல் களினால் இவர்கள் உள்ளத்தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்''

இதுவும் 'யாழ்ப்பாணச்சமய நிலையில்' நாவலர் அருளிய வாக்கேயாம் இதிலிருந்து நாவலரை முற்றாகக் கந்தபுராணம் விழுங்கிவிட்டது என்ற உண்மை புலனாகின்றது.

'யான்பெற்ற இன்பம்பெறுக இவ் வையகம்' என்ற குறிக்கோளுடைய அப்பெருந்தகையாளர், கந்தபுராணத்தைக் கேட்பதால் உண்டாகக்கூடிய பெரும்பயன்களை உணர்ந்துரைப்பதும் நாம் நினைவிற் கொள்ளவேண்டுவதே.

''இந்தக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திர பாக்கியம், சத்துரு ஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாந்தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும்அனுபவத்தினால் நிச்சயித்து வரப்பட்ட விஷயம் இது சத்தியம் சத்தியம், முக்காலும் சத்தியம்''

கந்தபுராணம்- கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் (பக்.கஎ)

கந்தபுராணச் சிறப்பு

சைவ சமயமே சமயம் என்றும் சிவபெருமானே முழுமுதற் கடவுளென்றும் முழுமையாய் நம்பி ஏற்றுக் கொண்டநாவலர்பெருமான், அவரின் புத்திரராகக் கொள்ளப்படும் கந்தசுவாமியின் திவ்யசரிதமாகிய கந்த புராணத்துக்கு இத்துணை மதிப்பளித்ததேன் என்பது நியாய பூர்வமான வினாவே, இதற்கு விடை, சிவபெருமானின் திருவாக்காகவே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிய திருப்பாடலே எனலாம்.

ஆதலின் நமது சக்தி
அறுமுகனவனும்
யாமும்
பேதக மின்றால் நம்
போல் பிரிவிலன்
யாண்டு முள்ளான்
ஏதமில் குழவி போல்
வான்யாவையும்
உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில்
வீடும் போற்றி
னர்க் கருள வல்.
லான்

என்பது அப்பாடல்.

அன்றியும் மாயையின் மகனும், ஆணவமே வடிவானதுமான சூரபன்மனே,

கோலமா மஞ்சை
தன்னில் குலவிய
குமரன்தன்னைப்
பாலனென் றிருந்
தேன் அந் நாட் பரி
சினை உணர்கி
லேன் யான்
மாலவன் தனக்கும்
ஏனை வானுளோர்
தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய்
நின்ற மூர்த்தியிம்
மூர்த்தியன்றோ,

என்றுரைப்பானேல், பாலனாகிய முருகன் பரமனே என்பதற்கு ஐயமும் உளதோ? எனவே கந்தபுராணம் பரம்பொருளின் புராணமே என்பதால் நாவலரும் அதற்கு மகத்துவம் அளித்தார் எனலாம்.

அது மட்டுமோ? ஏகான்மவாதம், மிண்டிய மாயாவாதம், முதலான புறமான சமயங்களின் இழிதகைமைகளை எடுத்திம்பிய சைவ சித்தாந்தத்தின் மேன்மையைப் பல்லாற்றானும் விரித்துரைப்பதனாலும், உலக வாழ்க்கையின் பெறுபேறுகளைப் பெற உதவுவதோடு, இறுதியிலேமுத்திப் பேற்றினை அடைவதற்கு உதவுதலாலும் கந்தபுராணம் நாவலரின் பெரும் போற்றுதலுக்கு உள்ளாயிற்று என்பதற்கு ஐயமில்லை.

அப்பணி செஞ்சடை ஆதி
புராதனன்
முப்புரம் எய்தனன் என்
பர்கள் மூடர்கள்
முப்புரம் என்பது மும்மல
காரியம்

என்னும் திருமந்திரக் கூற்றிற்கமைவாகக் கந்தபுராணம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களினது உண்மையையும்கதைச் சுவையோடுகலந்தளித்து, உன்னதமான சைவ சித்தாந்தச் செந்நெறியினை உணர்த்துவதாலும் ஒப்பற்று விளங்குவதுநாவலரைக்கவர்ந்தது எனக் கொள்வதிலே தவறில்லை.

கந்தபுராணத்தைநாவலர் முதலில்வசனவடிவில்தராததேன்?

மன்றுளாரடியாரவர் வான்புகழ் உலகெலாம் நின்று நிலவிடத் தொண்டர் மாக்கதையாகிய பெரியபுராணத்தை நாவலர் கத்திய ரூபத்தில் தந்தார், ஆடலே புரிந்தருளும் மதுரைச் சொக்கரின் திரு விளையாடல்களை உரைத்திடும்திருவிளையாடற் புராணத்தையும் உரை நடைவடிவில் உருவாக்கினார் ஆனால் தம்மையே தனக்காக்கிய கந்தபுராணத்தை வசனவடிவாக்கும் முயற்சியிலே அவர் முதலிலே தலைப்படாததேன் என்ற வினா எழுதல் இயல்பானதே. இதற்கான காரணிகள், பின்வருவனவற்றுள் ஒன்றாகலாம்.

I. ஆறு காண்டங்கள், பல படலங்கள், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட திருப்பாடல்கள் கொண்ட பெரும் புராணத்தினை ஆற அமரச் செய்தல் வேண்டும் என்ற முடிவு.

அல்லது

II. மக்களிடையே பிரபலமானதும் புராணபடனவாயிலாக அவர்களுக்கு அறிமுகம் செய்ததற்கு வாய்ப்புடையதுமாய் இருப்பதால், அதனை வசனமாக்குவதிலும், மக்களிடையே பிரபலமடையாத பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் என்பனவற்றை முதலிலே அறிமுகம் செய்வதே பொருத்தம் என்ற முடிவு...

அஃதெவ்வாறாயினும்தமதிறுதிக்காலத்தில் அவர் தொடங்கி, அசுரகாண்டம், யாகப்படலம் வரையிலும் எழுதியதைத் தொடர்ந்து அவரின் மாணக்கரான ச.பொன்னம்பலபிள்ளை மிகுதியை உரை நடையில் எழுதிமுடித்தமை சைவசமயிகளின்பெரும் பேறேயாகும்

பக்தியைப் பரப்பிடும் உத்திகள்

சோழர்வரலாறுஎழுதியதிரு நீலகண்ட சாஸ்திரி மத்திய காலத்தில்இந்துக் கோயில்கள் அடைந்திருந்த உன்னதநிலையையும் அவை சமய நிறுவனங்களாய் மட்டுமன்றிச் சமூக, கல்வி கலைமையங்களாகவும், பொருளாதார கேந்திரங்களாகவும் நிலவிய பாங்கினை மிகவும் விதந்தும் விரித்தும் உரைப்பர், மக்களின் கவனங்களை ஆலயங்களை நோக்கி முற்றதும் ஈர்ப்பதற்கான பல உத்திகளும் அக்காலத்தில் கையாளப்பட்டன.

பண்ணிசை, வாத்தியஇசை, நாடகம் (நடனம்) என்பன மூலமும் பக்தியை வளர்க்கும் நிலை அன்று காணப்பட்டது. இறைவனையே கானப்பிரியனாகவும், கலைவல்லுநனாகவும் சமயகுரவர் போன்றோர் காணலாயினர், ஏழிசையாய் இசைப்பயனாய் எம்பெருமான் விளங்கினான். அவனை நாளும் இன்னிசையால்பாடிய சம்பந்தப்பெருமான் கானத்தின் ஏழுபிறப்பாய் விளங்கினார். அப்பர்சுவாமிகள் தமிழோடிசை பாடல் மறந்தறியாத் தன்மையராய்த் துலங்கினர். இன்னிசை வீணையர் ஒருபாலாகவும் இருக்கொடு தோத்திரமியம்பினர் ஒருபாலகவும் கண்டு கசிந்துருகினார் மணிவாசகப் பெருந்தகை. நாடகத்தால் அடியார் போல் நடித்தாரையும் அவர்காணத் தவறவில்லை.

புலனைந்தும் பொறிகலங்கி அறிவழிந்திட்டைம்மேல் உந்தி அலமந்த போதாக அஞ்சேலென் றருள் செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழை
யென் றஞ்சிச்
சிலமந்தி மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே.

உலகியற் கவலைகளிலே ஆழ்ந்து உண்மையான இறையருளையும உணர்ந்து கொள்ளாது அலமர்ந்திருக்கும் ஆன்மாக்களின் மனப்போக்குகளைக் குரங்குகளின் போக்குடன் ஒப்பிட்டுரைக்க முற்பட்ட பாலறாவாயர், மேற்குறித்த பதிகத்தில் எடுத்துக் காட்டும் வருணனையூடாக ஆன்ம தத்துவம் ஒன்றினைப் புலப்படுத்தும் அதேவேளையில், அக்காலத்திலே ஆலயங்களிலே நடனமாதரின் பத்திகலந்த ஆடல் பாடலையும் குறித்திடத் தவறவில்லை.

(தொடரும்)

---

### 28 இலட்சம் ரூபா
## கொள்ளை

(கொழும்பு)

செவ்வாயன்று கொழும்பு கொம்பனி வீதியிலுள்ள தனியார் வங்கியொன்றிலிருந்து 28 இலட்சம் ரூபாவை மாற்றிப்பெற்றுக்கொண்ட தனியார் நிதிநிறுவனமொன்றின் அலுவலர் வங்கியின் மலசல கூடத்தில் மயங்கிய நிலையிலிருந்து மீட்கப்பட்டார்.

இருப்பினும் பணம் களவாடப்பட்டுள்ளது.

வங்கியின் வாசலில்வாகனத்துடன் காத்து நின்ற நிறுவன உரிமையாளர் தேடி வந்து உள்ளே பார்த்தபோது அவர் வெறுங்கையுடன் மயங்கிய நிலையில்இருப்பதையேகாண முடிந்தது.

தன்னை இருவர்தாக்கியதாக மயக்கம் தெளிந்த அலுவலர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். (உ)

### கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ முகாம்களா இயங்கும் வீடுகள், பொதுக் கட்டடங்களின் சொந்தக் காரர்களுக்கான கலந்துரையாடல்ஒன்றுக்கு 233, படைப் பிரிவு கட்டளை அதிகாரி வி.ஆர்.எல்.அன்ரனி அழைப்பு விடுத்துள்ளார்

மேற்படி கலந்துரையாடல் எதிர்வரும் 17 ஆம் திகதி மாவட்டப் படைத்தலைமையகம் இயங்கும் மட்டக்களப்பு மாதரசி கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

படையினர் தங்கியுள்ள தனியார் வீடுகள், மற்றும் பொதுக்கட்டடங்கள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதுடன், வாடகை கொடுப்பனவு பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருப்பின் கட்டடச் சொந்தக்காரருக்கு நிவாரணம்பெற்றுக் கொடுக்கவும், வேறுதனிப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடவும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-9)

## குணமாக்கல் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த குணமாக்கல் வழிபாடு ஒன்று இன்றுகாலை 8 மணிக்கு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தியாவில் இருந்துவருகை தந்த மறையுரையாளர் அருட்தந்தை லூர்துராஜா தலைமையில் இடம்பெறவுள்ளஇவ்வழிபாட்டில் அருட்தந்தை இருதயராஜ் மற்றும் அருட்தந்தையர்கள பங்குகொள்வர்.

தொடர்ந்து இன்றைய தினம் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு விசேட நற்கருணைவழிபாடும்இடம்பெறவுள்ளது. (உ-7)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# நோய் தீர்க்கும் அரத்தை

அரத்தையில் சிற்றரத்தை, பேரரத்தை என இரு வகை உள்ளன. பழங்காலத்திலிருந்து வீடுகளில் கைமுறை வைத்தியத்தால் பயன்படுத்தப்படும் மருந்துகளில் அரத்தை முக்கியமானது. இது சிறு செடி வகையைச் சேர்ந்தது. சுமார் 18 முதல் 24 மீட்டர் உயரம் வரை இருக்கும். இதன் தண்டு மணம் உடையது. இதன் இலை 30 முதல் 60 சென்டி மீற்றர் நீளம் உடையது. பூக்கள் பச்சை கலந்த வெண்மை நிறமாக சிவப்பு நிற வரிகளுடன் இருக்கும். பூக்கள் கொத்து கொத்தாகப் பூக்கும். இது இந்தியாவில் பயிர் செய்யப்படுகிறது. வேர் பயன்படும் உறுப்பாகும்.

அரத்தை கோழையை அகற்றிப் பசியைத் தூண்டி உணவை எளிதில் சீரணிக்கச் செய்து உடலை உறுதியாக்கும். அரத்தை வேரை உலர்த்திப் பொடி செய்து இரண்டு முதல் நான்கு கிராம் தேனுடன் கலந்து தினமும் இரண்டு வேளை நாற்பத்தொரு நாட்கள் சாப்பிட்டுவர நாட்பட்ட இருமல், காசநோய், கரப்பான் முதலியவை குணமாகும். பசி உண்டாகும்.

எட்டுக் கிராம் அரத்தை வேரை எடுத்து சிதைத்து அதனை முந்நூற்று ஐம்பது மி.லீ. வெந்நீரில் போட்டு மூன்று மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் வடிகட்டி இருபது முதல் நாற்பது மி.லீ. வரை எடுத்து சிறிது தேன் கலந்து அருந்திவர நாள்பட்ட இருமல் நீங்கும். வாந்தி, இருமல், தொண்டைக் கட்டு உடையவர்கள் ஒரு சிறிய துண்டு சிற்றரத்தையை வாயிலிட்டு மென்று சுவைத்து அதன் சாற்றை விழுங்கினால் போதும் குணமாகும். நல்ல குரல் வளம் உண்டாகும்.

சிற்றரத்தை வேருடன் ஒரு சிறு துண்டு பனங்கற்கண்டையும் சேர்த்து மென்று விழுங்க சூட்டினால் ஏற்படும் வரட்டு இருமல் குணமாகும், சிற்றரத்தையைச் சுட்டு அதனைத் தேனில் உரைத்து தாய்ப்பாலில் கலந்து நாக்கில் தடவிவர சிறு குழந்தைகட்கு ஏற்படும் கோழைக்கட்டு, இருமல், மூக்கில் நீர்வடிதல் நீங்கும். அதிமதுரம், தாளிசபத்திரி, திப்பிலி, சிற்றரத்தை இவற்றை சம அளவாக 4.2 கிராம் எடுத்து நன்கு உலர்த்தி, பின்னர் சுத்தமான நீர் சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும் இதனுடன் 42 மிலி நீர் சேர்த்துக் கலக்கி அடுப்பில் வைத்து நன்கு கொதித்துப் பொங்கிய உடன் இறக்கி வடிகட்டி, தேன் சிறிது கலந்து தினம் இருவேளை சாப்பிடக் குத்திருமல், இருமல், நாள்பட்ட இருமல், தலைவலி, காய்ச்சல் முதலியவை குணமாகும்.

இதன் வேர்ப்பட்டை கீல் வாதத்திற்கும், மூக்கில் நீர் பாய்தலுக்கும், செய்யப்படும் மருந்துகளில் முக்கிய இடம் வகிக்கிறது. இதன் பட்டையும், விதைகளும் அழகு சாதனப் பொருட்களில் வாசனை சேர்க்கப் பயன்படுகின்றன. அரத்தை வேரை நன்கு உலர்த்தி பொடி செய்து பற்பொடியில் கலந்து தேய்த்துவர பற்கள் உறுதி பெறும். பல் ஈறு சம்பந்தமான நோய்கள் தீரும், அரத்தை நுரையீரல் சம்பந்தமான நோய்களுக்கும் ஏற்றது யுனானி, மருத்துவர்கள் இதை ஆண்மையைப் பெருக்குவதற்கும், நரம்புத் தளர்ச்சியை நீக்கவும் பயன்படுத்துகின்றனர்.

பேரரத்தையை முறைப்படி குடிநீர் செய்தும் சூரணம் செய்தும் உட்கொள்ள இருமல், காசம், பித்த நோயினால் வரும் தலைச்சுற்றல், மயக்கம் மற்றும் வலிப்பு நோய்கள் குணமாகும், எல்லாவகை விஷங்கள், குளிர்சுரம், பெண்களுக்கு மாதவிலக்கு சமயம் ஏற்படும் வயிற்றுவலி நீங்கும். சகலவித வாத நோய்கள், நாள்பட்ட புண்கள் அனைத்தும்குணமாகும். ●

டாக்டர் இரா. கண்ணன்

# நடமாடும் சோதனை நடவடிக்கை மீண்டும் இடம்பெறச் சாத்தியம்

(கொழும்பு)

கொழும்பு உட்பட பிரதான நகரங்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

உடனடியாக நடமாடும் பரிசோதனை நடவடிக்கைகளை செயற்படுத்துமாறு படையினர் கேட்கப்பட்டுள்ளனர்.

உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவினரின் நடவடிக்கைகளை பலப்படுத்தும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரைவிடுத்ததிலிருந்து இதுபற்றிய விவகாரங்களும் ஆராயப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களில் நடைபெற்றிருந்த யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களை தொடர்ந்தே பிரதமர் இவ்வாறு உத்தரவிட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. (உ)

# யுத்தத்தின் தாக்கத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாக்க வேண்டும்

## ஐ. நா. பொதுச்சபைமாநாட்டில்ஜனாதிபதி

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் சிறுவர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் இதிலிருந்து அவர்களைப்பாதுகாக்க எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பதை நாங்கள் ஆராய வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிறுவர் உரிமைகள்தொடர்பாக நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; நாடுகளில் காணப்படும் யுத்த நிலையினால்சிறுவர்கள் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எது அரசியல் நிகழ்ச்சி நிரலில் சிறுவர்களுக்கு மிகவும் முக்கிய இடம் வழங்கப்படுகிறது.

சிறுவர்களுக்கு கல்வி, சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவையை வழங்குகிறோம். அதனால் இவற்றிற்கு சட்ட பூர்வமான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வறிய நாடுகளிலுள்ளபுரட்சி நடைபெறும் நாடுகளிலும் சிறுவர்களின் நலனில் அக்கறை கொள்ள சகலரும் விழிப் புணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (உ-9)

### பொது மல கூடம்

## அமைப்பு

(சண்டிலிப்பாய்)

ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தில் யாழ். மருத்துவ பீட மாணவர்களின் முயற்சியால் இரண்டு பொது மல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பணிக்கு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் பாரியார் 50 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-255)

### கல்வயலில் பாடசாலை மீள இயங்குகிறது

(கல்வயல்)

மக்கள் மீளக்குடியமர்ந்த தென்மராட்சிப் பிரதேசத்தில் சேதமடைந்த கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை இடிபாடுகள் அகற்றப்பட்டு தற்காலிகத்திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் அங்கு தற்போது கல்வி கற்கிறார்கள்.

இப்பாடசாலை இடம் பெயர்ந்து வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய கட்டடத்தில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (உ-111)

# எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் ஐ. தே. க. வில் இணைவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் அங்கத்தவர்கள் சிலர் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்களாக மாறியுள்ளனர்.

நேற்று முன்தினம் இவர்கள் ஸ்ரீ கோத்தாவிலுள்ள தலைமையகத்திற்குச் சென்று கட்சி அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தின் மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவும் தற்போதைய அரசின் அரசியல் கொள்கைகளில் நம்பிக்கை வைத்தும் இந்தத்தீர்மானத்தை எடுத்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிளைச்செயலாளர்கள் 4 பேர் தவிசாளர் ஒருவர், பௌத்த பிக்குமார் ஆகியோரே இவ்வாறு இணைந்தவர்களாவர். (உ-5)

### முல்லை.ஆஸ்பத்திரியில் இருந்து

# நோயாளர்கள் யாழ் ஆஸ்பத்திரிக்கு வருகை

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இருந்து நோயாளர்கள் நேற்று முன் தினம்மேலதிக சிகிச்சைகளுக்ாகயாழ். போதனாவைத்திய சாலைக்கு ஏ-9 தரைவழிப் பாதை யூடாகஅழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை கடந்த30 ஆம் திகதியும் 3பேர் அவ்வாறு அழைத்து வரப்பட்டனர் (உ-10)

# வன்னியால்வந்தசிறுமியின் தங்கச் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த சிறுமியின் தங்கச்சங்கிலி களவாடப் பட்டுள்ளது.

வன்னியில் இருந்து நேற்று முன்தினம் தரைவழிப்பாதையூடாக குடும்பத்துடன்யாழ்ப்பாணம்வந்த மு, திருமகள் (வயது8)என்ற சிறுமியின் கழுத்தில்இருந்த இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியே திருடனால் பறித்துச் செல்லப் பட்டுள்ளது.

சிறுமியை சொந்த ஊரான அராலிசெல்லும் பேருந்தில் இருக்கவைத்துவிட்டு, தாயார் அருகிலுள்ள கடைக்கு பொருள்கள் வாங்கச் சென்றவேளை, மேற்படி சிறுமியிடம் வந்த நபர் ஒருவர் தாயார் அழைத்து வருமாறு கூறி அழைத்துச் சென்று சங்கிலியைப் பறித்த பின்னர் வின்சர் தியேட்டர்சந்தியில் தவிக்கவிட்டுச் சென்றதாக கூறப்படுகிறது. (உ-10)

# தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது

(தென்மராட்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சிக்கோட்ட அரசியற்துறைச் செயலகம் நேற்றுமுன்தினம்சாவகச்சேரி சங்கத்தானை தர்மோதரம் பிள்ளைவீதியில் திறந்துவைக்கப்பட்டது.

தென்மராட்சிமக்கள் நலச் சேவைகள் சங்கத்தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரை தமிழீழ அரசியற்துறையைச் சேர்ந்த வீயன் திருக்கணித ஜோதிட நிலைய அதிபர் ஸ்ரீ சிதம்பர நாதக்குருக்கள், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் க.கைலைநாதன், டாக்டர் சி.யமுனானந்தாஉட்பட வேறும் பலரும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைக்க செயலகப்பெயர்ப் பலகையை மாவீரர் ரவியின் தந்தையார் அ.க.வீரவாகு திறந்துவைத்தார்.

அதனைத்தொடர்ந்து மாவீரர் மாறனின்தாயார் திருமதி தங்கராஜா சந்திரமலர் செயலகத்தினை சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

அங்குஇடம்பெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

சாவகச்சேரி வணிகர்மன்றத்தலைவர் பி, என். சற்குணராஜா, கூட்டுறவுச்சங்கத் தலைவர்செ. சுப்பிரமணியம், புலிகளின்தளபதி பாப்பா கிராமசேவையாளர் எஸ். இராஜரத்தினம், பிரதேசசெயலக நிர்வாகஉதவியாளர் என். முருகையா ஆகியோர் உரைநிகழ்த்தினர். (உ-77)

# பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

(கொழும்பு)

யாழ். ஏ-9 கண்டிவீதியைப் புனரமைப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் எந்த வித உடன்படிக்கையும் இல்லையென்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின்பிரதி நிதிகள், தமிழீழ விடுதலைப்புலிகளினை சந்தித்ததன் நோக்கம் அப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் பற்றி அறிந்து கொள்வதே என்றும்,

இதே வேளை, கட்டுநாயக்கா கொழும்பு அதிவேக பாதையை நிர்மாணிக்க 11 மில்லியன் ரூபா செலவாகும் என்றும் இதற்கு ஏற்கனவே 4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## சிந்தனைக்கு விருந்து

### கம்பனது கற்பனை நாடாய் ஆக்குக

றம்பண்டா, பொடிமெனிக்கா, ஜகுபர், பீற்றர்
ராணியொடு செந்தில்என் றிவர்கள் கூடி
நம்மண்ணில் உடன்பிறந்தார் ஆக வாழும்
நாள்நெருங்க வேண்டுவம்நல் லிறைவன்ஆசி
எம்பந்த பாசத்தார் வேற்று நாட்டில்
இருக்காது திரும்பிநம் மிடையே வந்து
கம்பனது கற்பனைநா டாக இந்தக்
கவினீழம் தனையாக்க முயலல் வேண்டும்

- பழையவன்

# 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

# வலி. வடக்கு மக்கள் அடையாள உண்ணாவிரதம்

## 15 ஆம் திகதி பிரதேச செயலகம் முன் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

தம்மை மீளக் குடியமர்த்துவது தொடர்பான 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, வலி வடக்கு மக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை அடையாள உண்ணாவிரதத்தை வலி வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யுத்த அனர்த்தத்தால் கடந்த இருதசாப்தங்களாக வலிவடக்கு மக்கள் முற்றாகவே புலம் பெயர்ந்து வாழும் நிலை ஏற்பட்டது. இன்று 45 கிராம அலுவலர் பிரிவில் 17 ல் மட்டும் 5 ஆயிரத்து524 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 969 மக்கள் மட்டும் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டனர் எஞ்சிய சுமார் 83 ஆயிரம் மக்கள் இன்று சொந்த இடங்களில் குடியேறமுடியாத நிலையிலுள்ளனர்.

இம் மக்களது அவல நிலையை நீண்டகாலத் துயரத்தைப் பல தடவைகள் ஆட்சியாளர்களுக்கும் சகல உயர் அதிகாரிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் எடுத்துச் சொன்னோம். மகஜர்கள் அறிக்கைகளை வழங்கினோம் எந்தப் பலாபலனுமில்லை.

சொந்த மண்ணில் வாழும் உரிமை, விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமை, புண்ணிய ஸ்தலங்களை குல தெய்வங்களை வழிபடும் உரிமை, பிதிர்க்கடன் செய்யும் உரிமை, பிள்ளைகளுக்கு வளமான கல்வியைப் பெறும் உரிமை, அனைத்துமே மறுக்கப்பட்டு எமது மக்கள் அடிமை வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இது அடிப்படை மனித உரிமைகளை மறுக்கும் செயலாகும். கடந்த ஈராண்டுகளுள் எமது மக்களைப் போல் பாதிக்கப்பட்ட தென்மராட்சி மக்கள் விடயத்தில் அரசாங்கமும், அரச உயர் அதிகாரிகளும், அரசியற் தலைவர்களும் காட்டிவரும் அக்கறையை நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றோம் ஏனெனில் புலப்பெயர்வின் கொடுமை எமக்குத் தெரியும் அந்த மக்களது அவலம் நீங்கவேண்டும்.

அதே நேரத்தில் சுயநல நோக்கோடு அற்ப அரசியல் லாபத்துக்காக அமைச்சர்களும் அரசியல் அதிகாரிகளும் அங்கு உதவி வழங்க முண்டியடிக்கின்றார்கள் என்றே கருதுகின்றோம். காரணம் அண்மைக் காலங்களில் எமது மாவட்டத்துக்குப் படையெடுக்கும் அமைச்சர்கள், அதிகாரிகள் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் மட்டும் அழிவுகள் நிகழ்ந்துவிட்டதாக ஆரவாரப்பட்டு அவற்றைத் தரிசித்துச் செல்கின்றனர். மாநாடுகள் நடத்துகின்றனர். இவற்றிற்கு அரசாங்க அதிகாரிகளே வழிகாட்டி வருகின்றார்கள். இரு தசாப்தங்களாக வாழவக்கற்றுப் பரிதவிக்கும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட வலிவடக்கு மக்களது பிரச்சினைகளை அறியாதவர்களைப்போல பாராமுகமாய் இருப்பதையிட்டு வேதனை அடைகின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மக்களது இயல்பு வாழ்வு என்பது பற்றிய குறிப்பு வலி வடக்கு மக்களுக்கு ஏற்புடைத்து இல்லையா? என வேதான் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து 15. 05. 2002 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு பிரதேச செயலக முன்றலில் ஓர் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

- அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்று அர்த்தமற்ற முறையில் நிலத்தை ஆக்கிரமிக்காதே.
- கண்ணிவெடிகளை அகற்றி சொந்தமண்ணில் வாழவிடு.
- எமது பாடசாலைகள் அனைத்தையும் கையளி மாணவர்களது கல்வி உரிமையில் பாரபட்சம் காட்டாதே.
- இடம்பெயர்ந்த பாடசாலைகள் என்று உதவிகள் வழங்காதிருக்கும் பாரபட்சத்தைக் கைவிடு.
- சுயமாக எமது பாரம்பரிய தொழிற்சாலைகளைச் செய்யவிடு.
- வழிபாட்டு உரிமை, பிதிர்க்கடன் உரிமைகளை மறுக்காதே.
- சொந்த இடங்களில் இதுவரை மீளக்குடியமர்ந்தவர்களது அடிப்படை உரிமைகளைச் செய்துகொடு அப்பிரதேசங்களிலாவது கண்ணிவெடிகளை அகற்று.
- முகாம் வாழ்வுக்கு முடிவு கட்டு.
- நிவாரணப் பொருள்களது விலையை அதிகரித்து வயிற்றில் அடிக்காதே.
- இடம்பெயர்ந்து உறவுகள் இழந்த குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் போது முன்னுரிமை கொடு.
- மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை போன்றவற்றை அப்பிரதேசங்களில் மீளத்திற.
- ப. நோ. கூ. சங்கம், ஏனைய வர்த்தக நிறுவனங்களை சொந்த இடங்களில் இயங்கவிடு.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், இந்து கலாசார அமைச்சர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், யாழ். அரச அதிபர், வலி வடக்கு பிரதேச செயலர், வலிவடக்கு பிரதேச சபைத் தலைவர், யாழ். மாவட்ட கூட்டுப்படை கட்டளை அதிகாரி ஆகியோர்க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், கரந்தன், நீர்வேலி, உரும்பராய் கிழக்கு அருள் மிகு மனோன்மணி சமேத சிவபூதநாதேஸ்வரர் ஆலய இரதோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ)

● ● ● ● ●

(சண்டிலிப்பாய்)

ஆனைக்கோட்டை காரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று காலை இடம்பெறவுள்ளது. (உ-255)

## ஆன்மீக விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மறை மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக விழிப்புணர்வுக்கருத்தரங்கு நாளை காலை 9. மணிக்கு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில்இடம்பெறவுள்ளது.

மறையுரையாளர் அருட்தந்தைலூர்து ராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கைத் தொடர்ந்து புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் விசேட திருப்பலியும் இடம்பெறவுள்ளது. (உ-7)

## அரை இறுதிப் போட்டி

(ஆனைக்கோட்டை)

யாழ். மாவட்ட கல்வி வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையேயான 15வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவினரின் அரைஇறுதி கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 8.00மணிக்கு நல்லூர் சட்டநாதர்கோயிலுக்கு அருகிலுள்ள கரப்பந்தாட்டச் சங்க மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (உ-259)

## அமெரிக்கா வழங்கிய நிதியுதவி போதாது

### நேபாள அரசு தெரிவிப்பு

(காத்மண்டு)

மாவோ தீவிர வாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென அமெரிக்கா வழங்கியுள்ள 20 மில்லியன் அமெரிக்க டொலர், இராணுவ நடவடிக்கைகளுக்கு போதுமானதாக இருக்க வில்லை என்று நேபாள அரசு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு இதைவிட அதிகமான அளவு நிதி கிடைக்கும் எனத்தான் நம்புவதாக தெரிவித்த நேபாள பிரதமர் ஷேக் பகதூர் இவ்வாண்டு அமெரிக்காவால் வழங்கப்பட்ட நிதியினை விட அதிக தொகை அடுத்த ஆண்டு தேவைப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (உ-7)

## பாக்.குண்டு வெடிப்புக்கு அமெரிக்கா கண்டனம்

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க் குண்டுத்தாக்குதலை தாம் கடுமையாக கண்டிப்பதாகவும் உயிரிழந்தவர்களுக்கு நஷ்ட ஈடுவழங்கவுள்ளதாகவும்அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்திற் கெதிராகஅமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் நாடுகள் மீது திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதல்களில் இதுவுமொன்று என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை இக்குண்டு வெடிப்பில் பிரான்ஸ் நாட்டவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக பிரான்ஸ் மற்றும் பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையில் பேச்சுக்கள் இடம் பெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பயிற்சியில் ஈடுபட்ட கடற்படை விமானங்கள் விபத்துக்குள்ளாயின

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு அமெரிக்க கடற்படை விமானங்கள் விபத்துக்குள்ளானதில் குறைந்தது 8 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஒரு விமானத்தில் 3 பேரும் மற்றயதில் 4 பேருமாக பயிற்சியில் ஈடுபட்டபோது, விமானம் மெக்ஸிக்கோ கடற் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. (உ-7)

## விமான விபத்தில் 5 பேர் மரணம்

(கியூட்டோர்)

ஈக்குவடோரின் அமேசன் காட்டுப்பகுதியில் பறந்து கொண்டிருந்த சிறியரக விமானம் ஒன்று விபத்துக் குள்ளானதில் 5 பேர் பலியாகியுள்ளனர்.

இயந்திரக் கோளாறு காரணமாகவே இவ்விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது என்று ஈக்குவடோர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உ-7

## சூரியசக்திமூலம் குடாநாட்டுக்கு மானியஅடிப்படையில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள சூரிய சக்திமூலம் மின்சாரத்தினை பெறும் தொழில்நுட்ப நிறுவனங்களைச்சேர்ந்த பிரதிநிதிகள் குடாநாட்டிற்கு விஜயம்செய்து தமதுதிட்டத்தினை குடாநாட்டுக்குள் நடைமுறைப்படுத்துவதற்குரிய சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

ஷெல்சோலர் லங்காலிமிட்டெட் எக்சஸ் சோலார்லிமிட்டெட்ஷெல்கோசோலார்லிமிட்டெட்அல்பாதோமல்லிமிட்டெட் ஆகிய கம்பனிகளின் பிரதிநிதிகள் ஒன்பதுபேர் இங்குவிஜயம்செய்துள்ளனர்

இப்பிரதிநிதிகள் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தி தமது திட்டங்களை விளக்கினர்.

குடாநாட்டைப் பொறுத்தவரை அனேகமான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை அத்துடன்மின்சாரம் கிடைக்கும்பகுதிகளுக்கும் கிரமமாக கிடைப்பதில்லை இந்நிலையில் இயற்கையாக கிடைக்கும் சூரியசக்திமூலம் மின்சாரம் பெற்றுக்கொள்வதற்கு இத்திட்டம் உதவிபுரிவதுடன் சூழல் மாசடைதல் நேரத்தினை மிச்சப்படுத்தல் சிக்கனம், எளிமை மற்றும் பல அம்சங்கள் இத்தொழில்நுட்பத்தில் உள்ளடங்கியுள்ளன.

குடாநாட்டிற்குள் இரண்டு மாதங்களுக்குள் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதுடன் வன்னிக்கும் விஸ்தரிக்கப்பட இருக்கின்றது குறிப்பாக கிராமப்புறத்தினை மையப்படுத்தி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்குகிழக்கைத் தவிர்ந்த பல இடங்களில் இத்திட்டம் வெற்றியளித்துள்ளது. மக்களின் நன்மைகருதி இத்திட்டம் குறுகியகால கடன் அடிப்படையில் தவணை முறையில் செயற்படுத்தப்பட உள்ளது. அத்துடன் இந்தத் திட்டத்திற்கு உலகவங்கிஅனுசரணைவழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம்குடாநாட்டு மக்கள்மிகுந்த பயனடைவர் எனநாம்எதிர் பார்க்கின்றோம்.

கிராமமக்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறலாம் தவிரவும் திட்டம்நடைமுறைப்படுத்தப் படுமிடத்து குடாநாட்டில் வேலைவாய்ப்பற்றிருக்கும் நூற்றுக்கணக்கான இளைஞர்யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-19,2,)

## வீரப்பனை தேடும்பணி அடுத்தமாத ஆரம்பத்தில்

(புதுடில்லி)

சந்தனக்கடத்தல் வீரப்பனைத் தேடும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படஇருந்த வீரப்பனைத் தேடும்பணி தவிர்க்க முடியாத சிலகாரணங்களினால் அடுத்தமாதம் ஆரம்பத்தில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீரப்பனை 3மாதங்களுக்குள் கைதுசெய்து விடுவோம் என்ற தமிழக அரசின்அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்த வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி சரணடைந்தாலே யொழிய அவரின் உடலில் உயிர்உள்ளவரை பிடிக்க முடியாது என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## குஜராத் வன்முறையில் பத்தொன்பது பேர் பலி

(புதுடில்லி)

குஜராத்தில் நேற்று முன்தினம் நண்பகலுடன் முடிவடைந்துள்ள 24மணிநேரத்தில் இடம்பெற்ற வன்முறைகளில் 19பேர் பலியாகியுள்ளனர்.

தொடரும் வன் முறைகளைக் கட்டுப்படுத்த அகமதாபாத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வடோதரா நகரில் பலகனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குஜராத் முதல்வரின் பாதுகாப்பு ஆலோசகர் கே.பி.எஸ். வின் வன்முறை இடம்பெற்ற இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு வருகிறார் (உ-7)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலை கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் நடாத்தப்பட்டு வந்த முன்பள்ளிஆசிரியர்களுக்கான அடிப்படைக் கற்கை நெறியின் நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும் பொன்றாமை ஒன்றல்அரிது குறள்

குறள்

# வலம்புரி

## அரசியல் தந்திரம்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு உலக நாடுகளில் நல்ல செல்வாக்கு இருப்பது ஏற்கனவே தெரிந்த விடயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு இல்லாத செல்வாக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு சர்வதேச அரங்கில் உண்டென்பதை ஏற்றுத் தானாக வேண்டும். இதற்கு சிறுவர் உரிமைகள் பற்றி உரையாற்றுவதற்காக அவர் ஐ.நா சபையால் அழைக்கப் பட்டமை சான்றாகும். இதற்குக் காரணமாக இருப்பது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசியல் இராஜதந்திரமாகும்.

அதாவது இனப்பிரச்சினை தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவர் இரு கொள்கைகளைக்கடைப்பிடித்து வருகிறார்.

சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறி சர்வதேசத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்ட சந்திரிகா குமாரதுங்கா வெளிநாடுகளுக்குச் செல்லும் போது சமாதானத்தை வலியுறுத்துவது போல் தனது கருத்தை முன்வைப்பார்.

அந்த வழி முறையிலேயே கடந்த இரு தினங்களுக்கு முன்னர் ரி.என்.எல் தொலைக் காட்சிக்கு அமெரிக்காவில் இருந்து பேட்டியளித்த ஜனாதிபதி, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதை தான் ஏற்றுக் கொள்வதாக வெளிப் படுத்தியுள்ளார். எனினும் அவர் கூறும் தடை நீக்கம் என்பது எப்போது செய்யப் படவேண்டும்?

புலிகளின் தடை நீக்கம் என்பது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக இடம்பெறவேண்டும். அப்போது தான் பேச்சுவார்த்தையேநடைபெற முடியும். ஆனால் பேச்சுவார்த்தை நடக்கும் போது புலிகளின் தடையை நீக்கலாமென்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு. ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் அரசு-புலிகள் பேச்சுக்கே சந்தர்ப்பம் இல்லை.

இந்நிலையில் புலிகளின் தடையை நீக்குவதற்கு தான் தயார் என ஜனாதிபதி கூறியிருப்பது உலக நாடுகளை தன்வசப் படுத்தவே.


அதேபோல் புலிகள் ஆயுதத்தைஉடன்கைவிட வேண்டியதில்லை என்பதும் நல்ல பிள்ளைக்கு நடிக்கும் வார்த்தை ஜாலங்களேயாகும்.

# என்கடன் பணிசெய்து கிடப்பதே என்றுரைத்த

# திருநாவுக்கரசர் ஓர் உழவாரப்படையாளி

## வெள்ளி நற்சிந்தனை

### சிவ. சண்முகவடிவேல்



திருநாவுக்கரசு நாயனார் திருவாமூரில் திருவவதாரஞ் செய்தவர். தந்தையார் புகழனார். தாயார் மாதினியார். தமக்கையார் திலகவதியார். நாவரசருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார் என்பது. திருவதிகைத் திருவீரட்டானத்தில் திருப் பதிகம் பாடியதனால் சிவபிரான், 'நாவுக்கரசென்றும் கேழினும்நின் நன்னாமல நயப்புற மன்னுக' என அருளிச்செய்தார்.

திருத்தொண்டத் தொகையில் நன்னாமம்பெற்ற நன்னாவினால் 4, 5, 6 ம் திருமுறைகளை அருளிச்செய்தார், நாயனார். சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடியருளிய திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தில், 'திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன் எனப் போற்றுவார்.

சேக்கிழார் தொடுத்த செஞ்சொற்களால் திருநாவுக்கரசு நாயனாரை மனக்கண்ணில் காட்டும் கற்பனை இன்பம் கல்நெஞ்சையும் கனிவிக்கும்.

'மார்பு நிறைய மழையாகச் சொரியும் கண்ணீர், சிவஅன்பினால் உருகும் திருவடிவம், மதுரவாக்கில் தீந்தமிழின் மாலைகள்சேரும் திருவாய், சிவபெருமானுடைய பொன்னார்ந்த திருவடிகளைப் போற்றும் திருமணம், உழவாரத் தனிப்படை..'
அப்பர்

பத்திமை பழுத்த திருக்கோலத்தோடு உலகம்வாழ வேண்டும்என்ற திருவுளப்பாங்கு திருவீதித் திருத்தொண்டை ஆற்றிவந்தார்.

'தமக்கென முயலா
நோன்தாள்
பிறர்க்கென முயலுநர்' (புறம 182) என்ற சங்கச் செய்யுளின் விளக்கமாக விளங்கிய மேன்மையர்-அப்பரடிகள் ஞானச்செல்வரால் 'அப்பரே' என்று அன்பாக அழைக்கப் பெற்றவர். அப்பூதியடிகளார் ஆதரிக்கும் அரன்அடியார்.

தான் என்ற குடிசையில் வாழாதவர். நான்என்று நலியாதவர். தாங்கள் நாங்கள் என்று பரந்துபட்ட உளப் பாங்கினராதலின் உலகம் உவக்கின்றது. குறைவற வாழ்ந்தார்.

மனிதப் பிறவியின் முழுமையான நிறைவைப் பெற்றார். அப்பரடிகள். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என திருத் தொண்டின் செம்மையை சைவ உலகிற்கு வகுத்து வாழ்ந்து காட்டிய செயற்கருற் செய்கை வல்ல தீரர் வீரர்.

சிவநாமமே படைக்கலம்

சுண்ணாம்பு அறை - ஈசன் திருவடி நீழலாகக் குளிர்ந்தது. நஞ்சுகலந்த பாற்சோறு நல்லமுதம் ஆயிற்று. கோபாவேசம் ஊட்டி விடப்பட்ட பட்டத்து யானை கால்களை மடக்கிக் கும்பிட்டு வணங்கியது, கடலில் கல் தெப்பமாக மிதந்தது. இவ்வாறானநிகழ்ச்சிகள் விஞ்ஞான ரீதியான பரிசோதனைகளால் வெற்றி காணமுடியாதவை.

திருநாவுக்கரசு நாயனாருடைய நெஞ்சுறுதியும் குறைவில்லாத சிவபக்தியும் முழுமுதற் பரம் பொருளிடத்தில் தம்மை அடைக்கலமாக்கிக் கொண்டதால் சிவநாமம் படைக்கலமாக முன்னின்று காத்தது,

'அத்தா அடியேன் அடைக்
கலம் கண்டாய்
'படைக்கல மாக உன்
நாமத் தெழுத்தஞ்சென்
நாவிற் கொண்டேன்
'உன் அடைக்கலங் கண்
டாய் அணிதில்லைச் சிற்றம்
பலத்தரனே'

போன்ற வாக்குகள், நாவரசர் தம்மை அடைக்கலமாக்கிச் சிவநாமத்தைப் படைக்கலமாகக் கொண்ட உண்மையை உறுதிசெய்வன.

பணிசெய்வதே கடமை

சிவபிரானிடத்தில் தம்மை ஒப்புக்கொடுத்தமையால் கடவுளுக்குரிய கடமை தம்மைத் தாங்குதல் தமக்குரிய கடன் பணிசெய்வது என்றார் 'தன்கடன்னடியேனையும் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே'

கொய்மலர்ச் சேவடியிணையே குறுகிய கொள்கையினால், 'நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று வீரம் மொழிந்தார். ஒரு பொழுது உண்ணாவிரதத்தை மேற்கொள்ள உடனே இறைவன் குறை தீர்த்தார்.

சைவத்திற்கும் தமிழிற்குமாக வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரைப்பொன்னே போற்றுவோம். தனியடியார்களின் நாவரசர் ஒருவருடைய வீடுபேறு சித்திரைச் சதயம் எனப் பெரிய புராணத்தில் போற்றப்படுவது அதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

# நொந்தது போதும் இனியும் இந்த மண்ணில் இரத்தம் சிந்தும் போர் இருக்கக் கூடாது

## சமாதானப் பேரணி முடிவில் ஜயலத் உரை

(அரியாலை)

கடந்த 20 ஆண்டுகளாக தொடர்ந்த போரினால்நொந்தது போதும் இந்த மண்ணில் இனியும் போர் வேண்டாம் இரத்தம் சிந்துவதால் சமாதானம் மலரப் போவதில்லை. இதுதான் யதார்த்தம்.

சமாதானத்தை வலியுறுத்தி கடந்த மாதம் 21 ஆம் திகதி கதிர்காமத்தில் ஆரம்பமான சமாதானப்பேரணி நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் நாகவிகாரையை வந்தடைந்த போது, அங்கு இடம் பெற்ற கூட்டத்தில் சமாதான யாத்திரையின் ஏற்பாட்டாளரானபுனர்வாழ்வுபுனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

தெற்கில்இருந்துவடக்கிற்கு சமாதான நற்செய்தியை எடுத்து வந்திருக்கின்றோம். இந்நாட்டில் இன, மத, மொழி வேறுபாடின்றி சகல மக்களும் ஒற்றுமையாக மகிழ்வுடன் சமமாக வாழுகின்ற ஓர் இலங்கையை உருவாக்குவது தான் எமது நோக்கம்.

இந்த சமாதான யாத்திரையின் ஏற்பாட்டாளனாகயான் செயற்பட்டேனே ஒழியஇந்த யாத்திரைக்கு ஆலோசனை வழங்கியவர் எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களே.

தடைகள், எதிர்ப்புகள் இருந்த போதும், பௌத்தமத குருமார் அநேகரின் அயராத முயற்சியாலும், அரச ஊழியர்கள் பலனின் அனுசரணையாலும், மக்களின் முழுமையான பங்களிப்பாலும் இந்த யாத்திரை குறித்த இலக்கை வந்தடைந்திருக்கின்றது. நான் இதனால் எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைக்கின்றேன்.

இதுவெறும் பாதயாத்திரை அல்ல துயரம் தோய்ந்த தமிழ் சிங்கள மக்கள் வாழ்வை மலர வைக்கும் போகும் ஓர் உந்து சக்தி,

வானொலி, பத்திரிகையால் மட்டும் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது, மக்களுடன் இணைந்து அதற்காக செயற்பட வேண்டும் இச்சமாதான யாத்திரை அதற்குஅடித்தளம் இடுகின்றது.

இந்த யாத்திரையை தொடங்குகின்ற போது ஜயலத்திற்கு பயித்தியமா என்று கேட்டவர்களும் உண்டு. இம்மண்ணில் சமாதானம் மலர வேண்டுமானால் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

இருபது வருடங்களுக்கும் மேலாக மக்கள் போரினால் அனுபவித்த கஷ்டங்கள் போதும். சமாதானத்திற்காக மக்களும் இணைந்து செயல்படும் போது, இச்சமாதான முயற்சிகளைகுழப்பவும் தடைகளைஏற்படுத்தவும், பகைமை உணர்வை ஊட்டவும் சில சக்திகள் முனைகின்றன.

நாம் அனைவரும்மதமொழி இனவேறுபாடின்றி அச்சக்திகளுக்குஎதிராக ஒன்றுதிரண்டு நிற்க வேண்டும். இனி இந்த மண்ணில் இரத்தம் சிந்தும் போர் இருக்கக் கூடாது.

நேடந்து முடிந்த கொடிய சுபாரில் மாண்டு போன வீரர்ேள் எத்தனைபேர் காணாமல் பானோர் எத்தனை பேர் அகதிளானோர்எத்தனைபேர் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மீண்டும் நாட்டை சீரழிக்க முயலும் தீய சக்திகளையிட்டு விழிப்புடன் இருக்க வேண்டும்.

## தினசரி தியானம்

### கீர்த்தி


ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

- திருக்குறள்

கருணாகரா, நான் கீர்த்தியைக் கண்ணெடுத்தும் பாராது அல்லும் பகலும் உன்னையே நாடியிருப்பேனாக.

கீர்த்தி பகவத்சம்பத்துக்களில் ஒன்று, ஆனால்அது நிழல் போன்றது. நிழலைப் பிடிக்க ஓடுமளவு அது எட்ட ஓடிக் கொண்டேயிருக்கும். கீர்த்திக்காக உழைத்தவர்களெல்லாம் ஏமாற்றம் அடைந்தவர்களே ஆயினர். ஓர் அற்பக் காரணத்தை முன்னிட்டுக். கீர்த்தி அப கீர்த்தியாக மாறிவிடும். பின்பு அறத்தையும், அறம் காக்கும் கடவுளையும் கடைப்பிடிப்போரை கீர்த்தி தானே தேடிவரும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்



யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் இடம்பெற்ற சைவ மாநாட்டில் மூன்றாவது நாள் துறைசார் அறிஞர்கள் கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

அன்பு மாணவர்களே!
மிகவிரைவில்
வலம்புரியில்
எதிர்பாருங்கள்
க.பொ.த (சாதாரண) தர பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்.
விடைகளுடன்.

லாலா
சோப்
சண்சயின்
சோப்
எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வரவிருக்கின்றது.
லாலா. அச்சுவேலி

## கண்காணிப்புக் குழு...

தொடரணிக்காக 24 மணிநேரமும் திறந்து விடுதல் தொடர்பாகவும், வாரம் ஏழுநாட்களும் பகல் 12மணித்தியாலங்கள் வரை பயணிகள் போக்குவரத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பாகவும் பேசப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதேவேளை கடந்து 2ம் திகதி செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மேற்படி விடயங்கள் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உப தலைவர் சந்தித்துப் பேசியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க நேற்று இடம்பெற்ற இரண்டு கட்டப்பேச்சுக்களை அடுத்து இன்று வெள்ளிக்கிழமை மேலும் ஒரு பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் அடங்கிய குழு நடத்தவிருப்பதாகவும் அப்பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு இன்று அவர்கள் கொழும்பு திரும்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ம)

# யாழ்ப்பாணத்தில் "சிலிங்கோ" 15ம் திகதி திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

செலான் வங்கி, சிலிங்கோ ரவல்ஸ், மற்றும் சிலிங்கோ காப்புறுதி நிறுவனம் என்பனவற்றின் கிளைகள் எதிர்வரும் 15ம் திகதி யாழ் நகரில் திறந்து வைக்கப்படஉள்ளன.

செலான் வங்கி, சிலிங்கோ ரவல்ஸ் என்பன இல.560, 562 ஆஸ்பத்திரி வீதியிலும், சிலிங்கோ இன்சூரன்ஸ், சிலிங்கோ கிரமின் கிறடிற் கம்பனி, த பினான்ஸ் கம்பனி, எவ். அன்ட் புறெப்பட்டி பிறைவேட் லிமிட்டெட் ஆகியன இலக்கம் 173ஸ்ரான்லி வீதியிலும் திறந்து வைக்கப்படவுள்ளன.

சிலிங்கோ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் கொழும்பு வர்த்தக சங்கத் தலைவருமாகிய தேசமான்ய லலித் கொத்தலாவல அன்றயதினம் திறந்து வைப்பார்.

வெளிநாட்டு வங்கிகளில் இடப்படும் பணத்தை குறுகிய நேரத்தில் செலான் வங்கியூடாகப் பெற முடியும் என அதன் முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேள்ளை சிலிங்கோ ரவல்சில் விமானப் பயண ரிக்கட்டுகளை பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த.11)



பற்களின் வெண்மைக்கும், பாதுகாப்பிற்கும்
அன்னை
பற்பொடி
அன்னை தொழிலகம், இணுவில்

மில்க்வைற்
MILK WHITE SOAP
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

ராஜா
(யாழ்ப்பாணம்)
5வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா,
விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30
சனி ஞாயிறு 10.30, 2.30, 5.30
[C/3953]

## இலங்கை அரசு ...

விடக்கூடாது என்று தான் விரும்புவதாகவும் கூறினார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் தாய்லாந்து நாட்டில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் முதலில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இடைக்கால நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்துவது குறித்தும் தமிழர் வாழும் பகுதிகளில் நிரந்தர அமைதியை நிலைநாட்டுவது குறித்தும் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் இரண்டாம் கடடப் பேச்சுவார்த்தையிலேயே இனப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கான அடிப்படை விடயம் குறித்து ஆராயப்படும் என்றும் இரு தரப்பினரும் ஏற்கனவே அறிவித்துள்ளனர் என்பதும்இங்கு குறிப்பிடத்தக்கது.(ந)

## பல்கலைக்கழக ...

கடுழியச் சிறைத்தண்டனை வழங்கித் தீரப்பளித்தார்.

பிரஸ்தாப மாணவன் மாத்தளை உக்குவனையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## இலவச கண்சிகிச்சை...

கண்ணில் பிரச்சினையுள்ள மாணவர்கள் அவர்களது பகுதியில் உள்ள கண்வைத்திய நிபுணரின் வைத்தியச் சான்றிதழையும், பாடசாலையில் கல்வி கற்பதற்கான அத்தாட்சியை உறுதிப்படுத்தும்பாடசாலை அதிபரின்கடிதத்தையும் பெற்றிருக்க வேண்டு மெனவும் அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா அறிவித்துள்ளார். கண்சிகிச்சை முகாம் நடைபெறும் இடம் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வயது வந்தவர்கள் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருப்பின் அவர்களுக்கும் சிகிச்சை நடத்தப்படும் என்றும் இதில் கண்ணாடியின் பெறுமதியில் 50 வீதம் தனியார் உதவியுடன் வழங்கப்படும் என்றும் மிகுதியை சம்பந்தப்பட்டவர்கள் செலுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## புலிகளுடன் யுத்தம்...

உள்ளது.

அரசும் விடுதலைப்புலிகளும் மேற கொண்டுவரும் சமாதான முயற்சிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், பொ.ஐ.முன்னணியும் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன. இதன் காரணமாக அக்கட்சிகளில் உள்ள ஒரு. சில அங்கத்தவர்கள் இனவாதத்தைத தூண்டிவரும் ஜே.வி.பியினரின் ஆதரவை நாடி நிற்கின்றனர் என்றும் தெரிவித்த அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒரு யுத்தம் மீண்டும் ஏற்படுமாயிருந்தால் அரசாங்கம் உலக வல்லரசு நாடுகளின் ஒத்துழைப்பை பெற வேண்டிய நிலைக்குத்தள்ளப்படும் என்றும் எச்சரித்துள்ளார். (ம.5)

## இந்திய சபாநாயகராக...

எவரும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை.

இதனால் அவர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் இன்று சபாநாயகராக பதவியேற்கவுள்ளார்.

மக்களவை சபாநாயகராக இருந்த தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த பாலயோகி ஹெலிவிபத்தில் காலமானதை அடுத்தே புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மக்களவை சபாநாயகர் பதவியை ஏற்கப் போவதில்லை என தெலுங்கு தேசம் கட்சி அறிவித்ததையடுத்தே சிவசேனை கட்சியிலிருந்து சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (த)

# அழைப்புக்கட்டளை

## இல. 16 பிரிவு 55 (1)

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில

நீக்லோ, யோகநாதன் பெண்
நடராசா மகள் கலாநிதி
காங்கேசன்துறை,
தற்போது: பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

– வழக்காளி

வழ இல-மணநீக்கம்/298 எதிர்.

நீக்லோ யோகநாதன்
ஊரிக்காடு, பருத்தித்துறை வீதி,
ஊறணி, காங்கேசன்துறை.

–எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு, மேலே பெயர் குறிப்பட்டுள்ள வழக்காளி உமக்கும் தனக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தை, வெற்றும் வெறிதுமானதென பிரகடனமும் தீர்ப்பும் பெறுவதற்கு இந்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அதற்கு 07.06.2002 அல்லது அதற்கு முன்னர் நீவீர் நேரிலோ அல்லது சட்டத்தரணி மூலமோ தோன்றி மறுமொழி ஏதேனும் இருப்பின் இந் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவீர் அறிவிக்கப்படுகிறீர்.

நீர் மறுமொழி அணைக்கத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கபபடுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகிறீர்.

பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோற்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தவும்படுகிறீர்.

2002ம் ஆண்டு 05ம் மாதம் 06ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி,

து. சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்.
யாழ்ப்பாணம்.

வரைபு
பவானி சற்குணராசா
வழக்காளியின்,
பதிவு பெற்ற சட்டத்தரணி

(c/4196)

"RAMCO" CEMENT
"ராம்கோ" சீமெந்து
எமது நிறுவனத்தால் பல தடவை இந்தியாவிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட தரமான "ராம்கோ சீமெந்து"
9/5/2002ல் இருந்து ரூபா 400/= க்கு விற்பனை செய்யப் படுகிறது.
தொடர்பு கொள்ளவும்:
ஈஸ்வரபகவான் அன் கம்பனி
100 ஆஸ்பத்திரி வீதி, 91 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
T. P: 021-2507 T. P :021-2350
(5099)

... யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.